# இயல் 7.4 - நேர் மற்றும் எதிர் விகிதங்கள்

பயிற்சி எண் :: 7.4.1.1.H

நேர் விகிதம் - ஓரலகு முறை - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## நேர் விகிதம் - ஓரலகு முறை - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

இன்பசேகரன் மற்றும், அவருடைய 4 சகோதர சகோதரிகளின் குடும்பத்தார் எல்லோரும் கூட்டுக்குடும்பமாக அவர்களுடைய பாரம்பரிய வீட்டில் வசித்து வருகின்றனர். அவர்கள் எல்லோருக்கும் ஒரு தினம் உணவு சமைப்பதற்கு முக்கால் கிலோ அரிசியும் ஒன்றரைக் கிலோ காய்கறியும் தேவைப்படுகின்றது. தினத்திற்கு அவற்றிற்கு ஆகும் செலவு முறையே ₹36 மற்றும் ₹60. எனில் அக்டோபர் மாதம் தொட்டு டிசம்பர் மாதம் வரை உள்ள காலாண்டிற்கு ஆகும் மொத்தச்செலவு எவ்வளவு? ஓரலகு முறையைப் பயன்படுத்தி விடை காண்க.

ஒரு தினம் தேவைப்படும் முக்கால் கிலோ அரிசிக்கு ஆகும் செலவு = ₹36

எனில் ஒரு கிலோ அரிசியின் விலை $= ₹36 \div \frac{3}{4}$

$= ₹36 \times \frac{4}{3} = \frac{\overset{12}{\cancel{36}}\times 4}{\underset{1}{\cancel{3}}} = \boxed{48}$

இதே முறையில் 1 கிலோ காய்கறியின் விலையைக் கணக்கிடுகையில். . .

ஒரு தினம் தேவைப்படும் ஒன்றரை கிலோ காய்கறிக்கு ஆகும் செலவு = ₹60

எனில் ஒரு கிலோ காய்கறியின் விலை $= ₹60 \div 1\frac{1}{2} = ₹60 \div \frac{3}{2}$

$= ₹60 \times \frac{2}{3} = \frac{\overset{20}{\cancel{60}}\times 2}{\underset{1}{\cancel{3}}} = \boxed{40}$

ஒரு கிலோ அரிசி மற்றும் காய்கறியின் விலை ₹48 மற்றும் ₹40 ஆகும்.

கேட்கப்பட்டிருக்கும் காலாண்டில் உள்ள 3 மாதங்களின் மொத்த நாட்கள்

$= \overbrace{\text{அக்டோபர்}}^{31} + \overbrace{\text{நவம்பர்}}^{30} + \overbrace{\text{டிசம்பர்}}^{31} = \boxed{92}$

எனில் அரிசிக்கு ஆகும் மொத்தச் செலவு $= ₹48 \times \frac{3}{4} \times 92 = \frac{48 \times 3}{4} \times 92$

$= \frac{\overset{12}{\cancel{48}} \times 3}{\underset{1}{\cancel{4}}} \times 92$

$= 36 \times 92$

$= ₹3,312$

| | | | | |
|---|---|---|---|---|
| | × | | 3 | 6 |
| | | | 9 | 2 |
| | | | 7 | 2 |
| | 3 | 2 | 4 | |
| | 3 | 3 | 1 | 2 |

எனில் காய்கறிக்கு ஆகும் மொத்தச் செலவு $= ₹40 \times 1\frac{1}{2} \times 92 = \frac{40 \times 3}{2} \times 92$

$= \frac{\overset{20}{\cancel{40}} \times 3}{\underset{1}{\cancel{2}}} \times 92$

$= 60 \times 92$

$= ₹5,520$

| | | | | |
|---|---|---|---|---|
| | × | | 6 | 0 |
| | | | 9 | 2 |
| | | 1 | 2 | 0 |
| | 5 | 4 | 0 | |
| | 5 | 5 | 2 | 0 |

எனில் அக்டோபர் மாதம் தொட்டு டிசம்பர் மாதம் வரை உள்ள காலாண்டிற்கு ஆகும் மொத்தச்செலவு = ₹3,312 + ₹5,520 = ₹8,832

அக்டோபர் மாதம் தொட்டு டிசம்பர் மாதம் வரை உள்ள காலாண்டிற்கு ஆகும் மொத்தச்செலவு ₹8,832 ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 3rd August, 2022 :: 05:23 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.